**தலைப்பு 414 - சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்டமையினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவை இல்லாதிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக வருமானம் அல்லாத கிடைப்பனவுகள் கணக்கிலிடப்படும் போது கீழ் காணும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) திரட்டிய பரீட்சை மீதிப்படி திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 234,100,000 ஆனதுடன் நிதிச் செயலாற்றுகை கூற்றில் அது ரூபா 526,972,639 என காட்டப்பட்டிருந்தது. | அமைச்சின் திரட்டிய பரீட்சை மீதிப்படி திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 234,100,000 என காண்பது ஆண்டின் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை அமைச்சு தலைப்பு இலக்கம் 414 க்கு தொடர்புள்ள அளவாகும். | சகல சீராக்கள் களையும் சரியாக இனங்கண்டு அரச கணக்கு திணைக் களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திரட்டிய பரீட்சை மீதிப்படி ஏனைய பெறுவனவுகள் ரூபா 4,030,227 ஆனதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றின் படி ரூபா 10,848,642 என காட்டப்பட்டிருந்தது. | அமைச்சின் திரட்டிய பரீட்சை மீதிப்படி ஏனைய பெறுவனவுகள் ரூபா 4,030,227 ஆன அளவு செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை பெறுவனவுகள் ஆனதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 10,848,622 என காண்பது முழு வருடத்திற்குமான அளவாகும். | - மேற்படி - |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்குச் சொந்தமான பிளிமதலாவ மற்றும் பொறள்ளையில் அமைந்துள்ள ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையங்களின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது | காணி, கட்டிடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | தலைப்பு 124 கீழ் வருட ஆரம்பத்தில் நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 1,023,038,293 ஆக இருப்பினும் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைப்பு 414 க்கு ஏனைய தலைப்புக்களுக்கு மாற்றும் போது அம்மீதி ரூபா 1,022,750,540 ஆக எடுக்கப்பட்டு மாற்றல் செய்யப்பட்டிருந்தது. | 2021 வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | சரியாக அறிக்கை இடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6.3 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்கு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 6 இல் 7(vi) பிரகாரம் நிதி செயலாற்றல் அறிக்கைகளின் படி ஆண்டு இறுதியில் திறைசேரிக்கு முடிக்கப்பட வேண்டிய / பெற வேண்டிய பெறுமதி மற்றும் காசேட்டின் படி திறைசேரிக்கு முடிக்கப்பட வேண்டிய பெறுமானம் வித்தியாசமான பெறுமானத்தினை ஏற்பதால் அம்மீதிகளை ஒப்பீடு செய்வதற்காக கட்டுநிதி சீராக்கல் கணக்கொன்றினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி சீராக்கல் கணக்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய புள்ளிகளை பெற்றுக் கொள்ளப்பட்ட விதம் பற்றிய விபரங்கள் (குறிப்பொன்று போல்) உட்படுத்தி தயாரிக்கப்பட்டதுடன் அதனை தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. | சகல சீராக்கல் களையும் சரியான இனங்காணப்பட்டு அரச கணக்கு திணைக் களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தலைப்பு இலக்கம் 124 இன் கீழ் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு முடிக்கப்படாத உடகட்டு நிதியின் மீதி ரூபா 612,048 நாட்குறிப்பு மூலம் முடிக்கப்பட்டதாக காட்டப்பட்டிருந்த போதிலும் சிகாஸ் வேலைத் திட்டத்தினுள் கையேற்கப்பட்டமை காட்டப்படவில்லை. | ரூபா 612,048 க்கான வித்தியாசமாக இங்கு காணப்படுவது 2020.08.31 திகதி மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்ட காலத்தில் முடிக்கப்பெறாத உப கட்டுநிதி மீதியாகும். இதனை வருட இறுதியில் முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இவ் அமைச்சின் செலவின தலைப்புடன் தொடர்புபடாத செலவின தலைப்பு இலக்கம் 124 இன் கீழ் 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 31 வரையிலான கால கட்டத்தினுள் உபகட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் மொத்தம் ரூபா 299,691,034 நடவடிக்கை செயற்பாடுகளிலிருந்து உண்டான காசுபாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | காசு பாய்ச்சல் கூற்றில் முழு வருடம் தொடர்பான பெறுவனவுகள் குறிக்கப்பட்டுள்ளன. | பொதுக் கணக்கு சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றினை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இவ் அமைச்சின் செலவின தலைப்புடன் தொடர்புபடாத செலவின தலைப்பு இலக்கம் 124 இன் கீழ் முடிக்கப்பட்ட ரூபா 12,430,496 உபகட்டு நிதி மற்றும் தலைப்பு இலக்கம் 414 இன் கீழ் முடிக்கப்படாத உபகட்டுநிதி மீதி ரூபா 2,241,772 க்கான மொத்த தொகையான ரூபா 14,672,268 பணத்தினை காசுப்பாய்ச்சல் கூற்றில் திறைசேரிக்கு முடிக்கப்பெற்ற உபகட்டு நிதியாக காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் முழு வருடம் தொடர்பாக குறிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 5,762,582 மற்றும் ரூபா 5,228,870 ஆன போதிலும் காசு பாய்ச்சல் கூற்றில் அவற்றை முறையே ரூபா 14,605,406 மற்றும் ரூபா 9,372,330 என சீராக்கப்பட்டிருந்தன. | முற்பணக் கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு செப்டம்பர் மாதம் முதல் திசெம்பர் மாதம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் சனவரி முதல் திசெம்பர் வரையிலான மொத்த காலத்திற்குமான அளவினை காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | வைப்புக்களின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 1,011,394 மற்றும் ரூபா 1,510,581 ஆக இருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது முறையே ரூபா 13,193,843 மற்றும் ரூபா 4,999,220 என காட்டப்பட்டிருந்தன. | வைப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் செப்தெம்பர் முதல் திசெம்பர் மாதம் வரையினை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் சனவரி முதல் திசெம்பர் வரையிலான முழு காலத்திற்குமான அளவினை காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 1.6.5 கட்டுநிதி

---------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுடன் முன் வைக்கப்பட்ட ACA-3 படிவத்தில் கட்டுநிதி பெறுவனவு ரூபா 526,100,000 என காட்டப்பட்டு இருப்பினும் திணைக்கள பரீட்சை மீதியின் படி திறைசேரி கட்டுநிதி பெறுவனவு ரூபா 234,100,000 ஆக இருந்தது. திறைசேரி பரீட்சை மீதியின் படி கட்டுநிதி முடிக்கப்பட்டமை | திறைசேரி கட்டுநிதிப் பெறுவனவு மற்றும் முடிப்பனவு முறையே ரூபா 526,100,000 மற்றும் ரூபா 521,005,249 என உட்படுத்தப்பட்டிருப்பது மீளாய்வு ஆண்டுடன் தொடர்புடைய சனவரி முதல் திசெம்பர் வரையிலான பெறுமதியினைகளுக்கு அமைவாக ஆகும். | அரச கணக்கு சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள வழிகாட்டலின் பிரகாரம் சரியான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (செலவினம் மூலம்) ரூபா 112,122,848 ஆக இருப்பினும், ACA-3 படிவத்தில் ரூபா 521,005,249 என காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றின் படி 2020 திசெம்பர் 31 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதி ரூபா 2,241,772 என காட்டப்பட்டு இருப்பினும் நிதிக்கூற்றுடன் கட்டுநிதி கணக்கு பற்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள ACA-3 படிவத்தில் 2020 திசெம்பர் 31 முடிக்கப்பட வேண்டிய மீதி இல்லையென காட்டப்பட்டிருந்தது. | 2020.12.31 திகதிக்கு கட்டுநிதிக் கணக்கின் மீதியான ரூபா 2,241,772 க்கான தொகையினை 2021 சனவரி 02 ஆந் திறைசேரிக்கு கடத்தப்பட்டதால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**1.6.6 முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கணினி அச்சு வெளியீடு SA-50 முற்பண பெறுவனவு ரூபா 14,384,773 ஆக இருந்ததுடன் நிதி செயலாற்றுக் கூற்றில் அது ரூபா 24,751,602 என காட்டப்பட்டிருந்தது. | நிதி செயலாற்று கூற்றில் ரூபா 24,751,602 என முற்பண கொடுப்பனவு காட்டப்பட்டுள்ளமை முழு வருடத்திற்குமான அளவாகும். | சகல சீராக்கங்களையும் சரியாக இனங்காணப்பட்டு அரச கணக்கு திணைக் களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் படி நிதிக்கூற்றினை தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | திறைசேரி கணினி அச்சு வெளியீடு SA-50 படி முற்பண கொடுப்பனவு ரூபா 66,838,390 ஆக இருந்ததுடன் நிதி செயலாற்றல் கூற்றின் படி அது ரூபா 70,894,121 என காட்டப்பட்டிருந்தது. | திறைசேரி கணனி அச்சு வெளியீட்டு நிதி செயலாற்று கூற்றில் ரூபா 70,894,121 என முற்பண கொடுப்பனவு காட்டப்பட்டிருப்பது முழு வருடத்திற்குமான அளவாகும். | - மேற்படி - |

### 1.6.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இழப்புக்கள் மீதான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் மீதான அட்டவணையினை நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | இழப்புக்கள் மற்றும் நட்டங்களுக்கான அட்டவணையினை நாளதுவரையாக்கு வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனை அறியத் தருகின்றேன். | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாட்டின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்தின் படி இழப்புக்களுக்கான அட்டவணை யொன்று பேணப்படல் வேண்டியமை |
| (ஆ) பொறுப்புக்கள் மீதான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் மீதான அட்டவணை நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு 09 மாதங்கள் நிலவிய கொவிட்-19 தொற்று நிலை காரணமாக உத்தியோகத்தர்களின் வருகை தடைப்பட்டதுடன் பொருண்மையான பொறுப்புக்கள் மாத்திரம் இணக்கப்பட்டியலில் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதனை அறியத் தருகின்றேன். | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் கண்ககாய்வு ஐய வினாப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அமைச்சினை குத்தகை கட்டிடமொன்றினை நடாத்தப்படுவதுடன் சகல பராமரிப்பு அலுவல்களும் குத்தகைக்காரரால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு இருக்கையில் கட்டிட நிர்மாணம், புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல், பராமரிப்பு வேலைகளுக்காக வரவு செலவு ஒதுக்கீட்டின் மூலம் 3 செலவு விடயங்களுக்காக மொத்தம் ரூபா 2,690,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையில் ரூபா 2,227,681 அதாவது நூற்றுக்கு 82.8 மீதியாகி இருந்தது. அதன்படி தேவைகளை இனங்கண்டு கொள்ளாது அவ்வந்த செலவின விடயத்துக்காக ஒதுக்கீடு ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. | அமைச்சரவை மாற்றத்தின் படி கிராம சக்திப் பிரிவு உட்பட பல பிரிவுகள் இவ் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டன. அவ்வாறு வருகை தந்து அதிகாரிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும Covid 19 தொற்று நிலைமை காரணமாக பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் பிரகாரம் வளங்களை கையேற்றுக் கொள்வதற்கு முடியாது போயிற்று. | மதிப்பீடுகளை சரியாக ஒழுங்குபடுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டியவை. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) அமைச்சினால் 22 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட பலதரப்பட்ட சேவைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பாக ரூபா 2,906,207 க்கான பொறுப்புக்களின் பெறுமதி பொறுப்புக்களுக்கான கூற்றில் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய Covid 19 தொற்று நிலைமையினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் காலத்தினுள் பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் சகல விதமான இணக்கப்பாடுகளையும் இனங்கண்டு கொள்ள இயலாது பின்னர் பொருட்கள் மற்றும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | சேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள செலுத்தல்களை இனங்கண்டு கொள்ளப்பட்டதுடன் அவற்றுக்கான செலுத்தல்களை மேற்கொள்வதற்கு நேர்ந்தது. | |
| (ஆ) | சீதுவை சமூக அபிவிருத்தி நிறுவன கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 1,000 மில்லியன் ஆனதுடன் 2018 வருடம் முதல் 2020 திசெம்பர் 31 வரை நிதிக் கூற்றுக்களின் படி செலவினம் ரூபாரூபா 589.29 மில்லியன் ஆகும். மேற்கொண்டும் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியான ரூபா 410.707 இணக்கப்பாடுகள் என வெளியாக்கப்பட்டிருக்க வில்லை. | சீதுவை சமூக அபிவிருத்தி நிறுவன கட்டிடத்தை நிர்மாணித்தல் 03 வருட வரையிலான செயற்பாட்டு அபிவிருத்தி செயற்திட்டமாவதுடன் Covid 19 தொற்று நிலைமை காரணமாக இதனை செய்து முடிப்பதற்கு முடியாது போயிற்று. எதிர்காலத்தில் நிர்மாணிக்கவுள்ள கட்டிட பெறுமதியினை கணக்குகளில் காட்ட முடியாதமையினால் இதனை பொறுப்புக்களுக்கான அட்டவணையில் உட்படுத்தப்படவில்லை. | - மேற்படி - |

## 2.3 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனம் | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 1647(அ) மற்றும் 1994 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய இலக்கம் 26/92)1 ( கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | ஏற்பாடுகளின் படி அமைச்சுக்கு சொந்தமான 50 வாகனங்கள் தொடர்பாக ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக ஆய்வு சம்பந்தமான படிவம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியமை. |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு 4 வைப்புக்களின் தொகை ரூபா 53,441,266 ஆனதுடன் அம்மீதியினுள் 1 வருடம் முதல் 4 வருடங்கள் இடைப்பட்ட காலம் பழமையான ரூபா 2,864,223 க்கான வைப்புக்களின் மீதிகள் இருந்தன. | 2020 வருடம் வரையறுக்கப்பட்ட பணிக் குழாமினைக் கொண்டு அத்தியாவசியமான கடமைகளை நிறைவேற்றிக் கொண்டதுடன் வைப்புக் கணக்கில் சில வருடங்களாக நிலவிய மீதிகள் மீதான மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இடை நிண்டன. எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நோக்கு மற்றும் பணி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய இலக்கம் 2196/27 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் பொது அமைச்சுக்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் செயற்பாடுகளும் அதிவிசேட 05 முன்னுரிமைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தன. சிறு மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்திகளை விஸ்தரிப்பதும் புது முயற்சியாண்மையாளர்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்படும் காணிகள், கடன் சலுகைகள், வியாபாரத்திற்கான | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 03 விசேட நிறுவனங்களும் கம்பனி அதிகார சட்டத்தின் கீழ் பதியப்பட்ட மற்றும் திறைசேரிக்கு முழு உரிமையினை பெற்றுக் கொடுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளாகும். இம் 03 நிறுவனங்களையும் அவ் அமைச்சுக்கு கையளிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு முன்னைய 05 வருடங்களுக்கான இறுதிக் கணக்குகள் தயாரித்தல் உட்பட 03 நிறுவனங்களையும் செயல் திறனான மட்டத்திற்கு கொண்டு வருவதற்காக | அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| ஆலோசனை, தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றினையும் இலகுவாக பெற்றுக் கொடுக்கும் விசேட வேலைத்திட்டமொன்றினை செயற்படுத்தலும் சிறு மற்றும் கைத்தொழில் துறைக்காக தனியொரு நிறுவனத்தின் மூலமாக சகல சேவைகளையும் வழங்கும் முறைமையினை ஏற்படுத்துவதும் மற்றும் அத்துறைகளின் பெறுமதியினை மேம்படுத்தும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதுடன் தேவைப்படும் ஊக்குவிப்பினை பெற்றுக் கொடுப்பது ஆகிய அதிவிசேட முன்னுரிமையினை செயற்படுத்தலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அச் செயற்பாடுகளுக்காக அமைச்சிடம் நிர்வாக அதிகாரத்தை கையளிக்கும் சட்டத்தால் ஒன்றிணைக்கப்பட்ட 3 நிறுவனங்களான சிறு மற்றும் மத்திய அளவிலான முயற்சியாண்மை மூலதன கம்பனி, சிறு மற்றும் மத்திய அளவிலான முயற்சியாண்மை அதிகார சபை, பொது வளங்களுக்கான முகாமைத்துவ கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் நடவடிக்கை செயற்பாட்டு அமைச்சினை நிறுவப்பட்டு 6 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் அவற்றை ஆரம்பிப்பதற்கு இயலாது போய் உள்ளது. | இவ் அமைச்சினால் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது என்பதனை அறியத் தருகின்றேன். இது தொடர்பான விடயங்களை உங்கள் அவதானிப்புக்குட்படாது இருப்பதனால் இது தொடர்பான கோவை வரிசை ஒன்றின் நிழல் பிரதியினை இத்துடன் அனுப்புகின்றேன். | |

## 3.2 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கிராம சக்தி செயலகம் | | |
| 2020 வருட அமைச்சின் செயல் திட்டத்தின் கிராம சக்தி செயலகத்திற்காக ரூபா 325.92 மில்லியன் | 2020 வருடம் ஆரம்ப 08 மாத காலம் கிராம சக்தி செயலகம் சனாதிபதி செயலகத்தின் கீழ் | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முறையாக செயற்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒதுக்கீடுகளிலிருந்து 320.92 மில்லியன் அதாவது நூற்றுக்கு 98 வீதம், 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட் திட்டங்கள் தொடர்பாக கையிருப்பு பட்டியல்களை செலுத்துவதற்கானதாகும். அப்பட்டியல்களிலிருந்து ரூபா 224.22 மில்லியன் மீளாய்வாண்டில் முடிக்கப்பட்டிருந்தது. | செயற்பட்டதுடன் 2020 ஆகஸ்ட் 01 ஆந் திகதிக்குப் பிறகு இவ் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 320.92 மில்லியனுக்கான மொத்த தொகையும் 2019 வருடம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கான பொறுப்புக்களுக்காக பற்பல நிறுவனங்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய பட்டியல்கள், அரச நிறுவனங்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் தீர்க்கப்பட்டன என்பதனை அறியத் தருகின்றேன். | வேண்டியமை. |
| (ஆ) | தேசிய சமூக அபிவிருத்தி நிலையம்<br>-----------------------------------------------<br>2020 வருடம் அமைச்சின் செயற்திட்டத்திற்கு அமைய தேசிய சமூக அபிவிருத்தி நிலையத்தின் மூலம் சீதுவை கட்டிடத்திற்காக தேவையான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 16.900 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் ரூபா 6.5 அதாவது நூற்றுக்கு 23 வீதம் ஆகும். | முதல் கட்டமாக ஒதுக்கப்பட்ட B பகுதியின் வேலைகள் முடிக்கப்பட்டு நிலையத்தினை அக்கட்டிடத்திற்கு கொண்டு சென்றதுடன் சம்பூரண கட்டிட தொகுதிக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் வேலை முடிக்கப்பட்ட பகுதிகளுக்கான உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முறையாக செயற்படுத்த வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (பிளிமதலாவ மற்றும் பொறள்ளை)<br>------------------------------------------------<br>பொருளாதார மற்றும் சமூக, மானசீக நிலையில் பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ள கிராமப்புற ஏழை மக்களின் ஏழ்மையினை போக்குதல் மற்றும் கிராம அபிவிருத்தியினை மேம்படுத்துவதன் மூலம் புதியதொரு முறைமையினை அறிமுகப்படுத்துதல் அந்நிலையத்தின் அடிப்படை நோக்காக கொள்ளப்பட்டது. இதற்காக மீளாய்வாண்டில் செயற்பாட்டு திட்டத்தின் மூலம் 10 செயற்பாடுகளுக்காக ரூபா 16.02 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிதிசார் முன்னேற்றம் ரூபா 9.07 மில்லியன் ஆக இருந்தது. நிலையத்தின் அடிப்படை நோக்கினை நிறைவேற்றுவதற்காக செயற்பாடுகளை செயற்படுத்துவதை விடுத்து ரூபா 08 மில்லியன் செலவிடப்பட்டு காரியால உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிட திருத்த வேலைகள் மேற்கொள்ளல் ஆகியன செய்யப்பட்டிருந்தன. | பொறல்லையில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மிகவும் பழமைவாய்ந்த கட்டிடமாகையால் அதன் திருத்த வேலைகள் பல கட்டங்களாக செய்து முடிக்கப்பட்டதுடன் தற்போது இறுதிக்கட்டம் மாத்திரம் செய்து முடிக்கப்பட இருக்கின்றது. திருத்த வேலைகள் முடிக்கப்பட்ட தங்கு விடுதி, பிரதான கேட்போர் கூடம் 02, சிற்றுண்டிச்சாலை, மற்றும் கேட்போர் கூடத்தின் நுழைவாயில் வழியினை தற்போது முடிக்கப்பட்டுள்ளது. அதன் படி வெளிவாரி மற்றும் உள்ளக பயிற்சி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதனால் எதிர்பார்த்த நோக்கினை திறைசேரி வருகிறது. | - மேற்படி - |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2015 யூலை 10 ஆந் திகதிய இலக்கம் 2/2015 பொது நிதி சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் பாவனையிலிருந்து நீக்கப்படல் மற்றும் 2018 மார்ச் 19 திகதிய இலக்கம் 1/2018 கொண்ட சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள மோட்டார் வாகனங்களை 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் பாவனையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என சுற்றிக் காட்டப்பட்டிருந்த போதிலும் அமைச்சுக்கு சொந்தமான 05 வாகனங்கள் தொடர்பாக 2021 மே மாதம் வரையிலும் பாவனையிலிருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் அவதானிப்புடன் தொடர்பு உள்ளதாக இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனை பிரகாரம் நீக்குதல் விவகாரம் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மூன்றாம் மற்றும் இரண்டாம் மற்றும் ஆரம்ப தரத்திலான பதவிகள் முறையே 17 மற்றும் 18 ஆக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உண்மையான பணிக்குழாம் முறையாக 289 மற்றும் 53 ஆன காரணத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவினை மீறி 307 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | மேலே அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு மேல் அமைச்சின் பணிக்குழாம் உட்பட உத்தேச பணிக் குழாமினை அங்கீகரித்துக் கொள்வதற்காக எனது இலக்கம் SMS/ADM/1/2/1-2019 மற்றும் 2021 சனவரி 19 மற்றும் 2021 பெப்ரவரி 11 திகதிய கடிதங்கள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் | செயற்பாடுகளை் துரிதப்படுத்தி நிர்வாக பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் பதில் எதுவும் கிடைக்காததனை அறியத் தருகின்றேன். | |
| (ஆ) | 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதிய இலக்கம் DMS/SM/02 கொண்ட முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதத்தின் 05 ஆம் பந்தியின் படி இவ் அமைச்சு மக்கள் மைய அரசின் அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்து கொள்ளும் பொருட்டு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள், செயற்பாடுகள், முன்னுரிமைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இலக்குகளை அடைந்து கொள்ளும் போது சம்பந்தப்பட்ட துறைகளில் விசேட அறிவு மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த பதவியணி நிறுவனத்திற்கு தேவையென்பது இனங்காணப்பட்டது.மேலும் அவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு பதவியணியினரில் திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் அதற்கான முறையான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டபோதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | சம்பந்தப்பட்ட துறைகளில் விசேட அறிவு மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த பணிக்குழாமினை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டியமை. |